மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய சர்க்கார் அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

Copper Mines.

* 322 Q.—THIRU R. R. MUNUSAMW : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that Copper Mines are functioning in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, நாம் ஆராய்ச்சி நடத்தாவிட்டாலும், வேறு மாநிலத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக, செம்பு எடுக்கப்படுமா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காப்பர் தனியாக எடுக்கப் படுவதில்லைcopper sulphides of lead, zinc, nickel, molybdenum, etc. இவைகளோடு கிடைக்கிறது. தென்னுற்காடு மாவட்டத்தில், மாமண்டூர் பகுதியில் 0.63 சதவீதம் காப்பர் உள்ள பொருள் கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பொருளாதார அளவில் அதை எடுக்கமுடியுமா என்பது பரிசீலனையில் இருக்கிறது.

Closed Mills.

* 323 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have taken steps to reopen the closed textile mills at Coimbatore; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தொழில்கள் (வளர்ச்சி முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் ஆய்வுக் குழுக்கள் அமைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் முடிவு இன்னும் தெரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏற்கனவே கோவையில் முருகன் மில் திறக்கவும், நகரத்திலுள்ள, பங்கஜா மில் போன்ற மூன்று மில்கள் சீக்கிரத்தில் திறக்கப்படும் என்ற வாக்குறுதி கொடுக்கப் பட்டதே. அதை துரிதப்படுத்த படிப்படியாக ஒவ்வொரு மில்லாகவாவது திறக்கப்படும் என்ற ஒரு முடிவை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதிலே இரண்டு ஆலைகள் நீதி மன்றத்தில் இருக்கின்றன. முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்